Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Morality in *Pathitruppathu*

**Dr.T.R. Udayakumari,** Assistant Professor of Tamil,
Sree Ayyappa College for Women, Chunkankadai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-9694-7076**
**DOI: 10.5281/zenodo.6619284**

## Abstract

*Sanga Illakiyam is one of the greatest classical literatures. This literature is a pride to Tamil Language and Tamil Land. This period deals with the history of Tamil People and Tamil Kings. This article talks about the King Imayavaramban's philanthropy, altruism and hospitality. The objective of this research article is to analyse the culture and tradition during Imayavaramban's period.*

**Keywords:** *Pathittrupathu*, Kings Lifestyle, Hospitality, Kindness, Courage.

## References

[1] M. Varatharajan. *Tamil Illakiya Varalaru*. Sahithya Academy, New Delhi.
[2] *Sanga Tamizharglin Kalai Illakkiya Samuga Panpaattu Varalaaru*, Kizhaku Pathippagam, 2015.
[3] Alice.A. *Pathittrupathu Moolamum Uraiurm*. New Century Book House, 41B - Syndico Industrial Estate, Ambathur, Chennai - 600 098.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# *பதிற்றுப்பத்து* வெளிப்படுத்தும் அறவாழ்க்கை


**முனைவர் டி. ஆர். உதயகுமாரி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி, சுங்கான்கடை., தமிழ்நாடு, இந்தியா.

**ORCiD: https://orcid.org/0000-0002-9694-7076**



**DOI: 10.5281/zenodo.6619284**



**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியங்களின் மிகவும் பழமையும் சிறப்பும் வாய்ந்த இலக்கியம் சங்க இலக்கியம். தமிழுக்கும் தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்த்த இலக்கியம் சங்க இலக்கியம் சங்க கால மன்னர்கள் மற்றும் மக்களின் வரலாற்றைக் கூறும் இலக்கியமான பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் தலைவனான இமையவரம்பன் சேரலாதனின், கொடை, வீரம், பண்பாடு சமுதாயம் போன்ற வாழ்க்கை நிலையை ஆராய்ந்து கூறி பழமையான தமிழர்களின் சிறப்பான பண்பாட்டை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது.*



**கருச் சொற்கள்:** பதிற்றுப்பத்து, அறவாழ்க்கை, வீரம், கொடை, பண்பாடு பேணல்.


**முன்னுரை**

சங்க கால மக்களின் வாழ்க்கை முறைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும். இவை தமிழனின் தொன்மையை விளக்குவதோடு அவன் வாழ்ந்த சிறப்பான வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டுகிறது எனலாம். இவை சங்கால மனிதனின் அகம் புறம் ஆகிய இரு வாழ்க்கை நிலைகளை எடுத்துக் கூறுகிறது. இதில் பதிற்றுப்பத்து என்பது புறநிலை வாழ்க்கை சார்ந்த நூலாகத் திகழ்கிறது. இந்நூல் மூவேந்தர்களுள் சேர மன்னர்களின் வரலாற்றைக் கூறும் நூல் எனலாம். சினம், காமம் அச்சம் நிலையற்று பொருள்மீது பற்று, கூடா ஒழுக்கம் போன்ற அறமற்ற செயல்களிலிருந்து தங்களை விடுபடுத்திக் கொண்டு அக்கால மன்னர்கள் வாழ்ந்தனர் எனலாம். மேற்கூறிய குணநலன்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு இமயவரம்பன் சேரலாதன் எவ்வாறு அறவாழ்க்கையை மேற்கொண்டான் என்பதை பதிற்றுப் பத்து வழி நின்று ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம். மக்களைப் பாதுகாத்தல் - அரசன் தன்னை விட தன் மக்களை பெரிதும் பாதுகாத்தான். மக்களின் இன்மைகளைப் போக்கி இன்பத்துடன் வாழ வழி செய்தான் என்பதை,

**"காடே கடவுள் மேன; புறவே**
**ஒள இழை மகளிரொடு மன்னர் மேன**
**ஆறே அவ் அனைத்து அன்றியும், ஞாலத்துக்**
**கூலம் பகர்நர்குடி புறந்தராஅ,**
**குடி புறந்தருநர் பாரம் ஓம்பி,**
**அழல் சென்ற மருங்கின் வெள்ளி ஓடாது**
**…நீ காத்த நாடே" (பதிற்றுப் பத்து பாடல் 13 வரி.20-30)**

என்ற பாடலால் உணரலாம். இமையவரம்பனின் நாட்டிலுள்ள காடுகள் கடவுள் உறையும் குடிகளையும் பாதுகாத்து, உழுது உண்ணும் வேளாளர் தம் எளிய குடும்பங்களைப் பாதுகாத்து மேற்குடிகளைக்

காதும், வாழ்ந்திருந்தான் என்ற செய்தி தெரிய வருகிறது. அவனது நாட்டில் வாழ்கின்ற மக்கள் நோயும் பசியும் இன்றி சிறந்த வாழ்க்கை மேற்கொண்டு வந்தனர் என்பதையும் மேற்கூறிய பாடலால் அறியலாம்.

**"சரணம் காணாது மாந்திரம் தூழைஇய**
**நனந்தலை பைஞ் ஞிலம் வருக, இந்நிழல என**
**பாடினி வேந்தே" (பாடல் 17: வரி.8)**

பகைவர்களின் நாட்டில் பாதுகாப்பற்று வாழ்கின்ற மக்களும் இமயவரம்பனின் நாட்டில் பாதுகாப்போடு வாழலாம் என்ற பாணனின் கூற்றின் வழி தன் நாட்டு மக்களை மட்டுமன்றி தன்னிடம் அடைக்கலம் என வந்தவர்கள் பகைநாட்டின் மக்களாக இருந்தாலும் அவர்களையும் பாதுகாத்து வந்தான் என்பதை மேற்கூறிய பாடலால் அறியலாம்.

**பொறையுடைமை**

**"பெரிய தப்புநர் ஆயினும்; பகைவர்**
**பணிந்து தப்புநர் ஆயினும்; பகைவர்**
**…கொள்ளுநை ஆதலின்" (பாடல் 17, வரி. 2-3)**

என்ற பாடலால் இளந்திரையன் வீரத்தோடு பொறுமையினையும் தனக்குரிய குணங்களாக கொண்டிருந்தான் என்பது விளங்கும். பகைவர்கள் பொறுத்தர்கரிய மிகப்பெரிய குற்றங்களைச் செய்தவராயின் அவர் அரசனை பணிந்து திறை தருவாராயின் அவர்களுடைய குற்றங்களை மன்னித்து, அவர் தருகின்ற பொருளை ஏற்றுக்கொள்ளும் பெருந்தன்மை உடையவளாக விளங்கினான் என்பதை உணரலாம்.

**விருந்தோம்பல்**

தமிழர்களின் பண்டுபாடுகளில் மிகவும் சிறந்தது விருந்தோம்பல் என்ற பண்பாடே தமிழர்களின் இல்லற வாழ்விலும் அரசர்களின் புறவாழ்விலும் விருந்தோம்பும் பண்பு, மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டது எனலாம். தனக்கு கிடைத்த உணவையும் பிற பொருள்களையும் மற்றவர்களுக்குக் கொடையாகக் கொடுத்து வாழ்கின்ற தன்மை புலவர்களிடத்தும் அரசர்களிடத்தும் காணலாம் என்பதை கீழ் வரும் பாடலால் அறியலாம்.

**"தொல்பசி உழந்த பழங்கண் வீழ**
**எஃகு போழ்ந்து அறுத்தவால் நினக் கொழுங்குறை**
**மைஊன் பெய்த வெண்ணெல் வெண்சோறு**
**நனை அமை கள்ளின் தேறலொடு மாந்தி**
**…நின் பெருகலி மகிழ்வே" (பாடல் 12, வரி. 15-25)**

அரசனிடம் பரிசு பெற எண்ணி அரண்மனையைச் சென்றடைந்த புலவர்களுக்கு இரைச்சியுடன் கூடிய உணவை கள்ளோடு சேர்த்து உண்ணச் செய்தான் என்றும் அவர்களின் கந்தையான ஆடைகளை நீக்கச் செய்து புதிய வெள;ளை ஆடைகளை உடுக்கச் செய்தான் என்றும் பெண்களுக்கு அணிய அணிகலன்களையும் கொடுத்தான் என்பதான் மூலம் அரசனின் விருந்தோம்பல் பண்பு புலனாகிறது. அரசன் எவ்வழிவழியோ அவ்வழியே மக்களும் என்பதற்கேற்ப பாணர்கள் தாம் அரசனிடம் பெற்று வந்து உணவும் பொருள்களையும் பிற பொருள்களையும் தான் மட்டும் அனுபவிக்காமல் சுற்றதர்க்கும் வறியவர்க்கு பகிர்ந்து கொடுத்தனர் என்பதை சங்க இலக்கிய பாடல்களால் அறியலாம்.

**"எமர்க்கு பிறர்க்கும் யாவர் ஆயினும்**

**பரிசில் மாக்கள் வல்லார் ஆயினும்**

**கொடைக் கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்**

**...வயிறுமாக இலியர், அவன் ஈன்ற தாயே!" (பதிற்றுபத்து - பாடல் 20 பக்கம் 23)**

என்ற பாடலின் மூலம் தம்மவரென்றோ, பிறவரென்றோ பாராமல் அனைவரையும் ஒரேபோல் கண்டு ஈயும் நெஞ்சையுடையவன் இமையவரம்பன் என்பதை உணரலாம்.

**சேரநாட்டு வளம்**

ஒரு நாட்டின் செழிப்பு என்பது அந்நாட்டின் நீர்வளம் நில வளத்தை வைத்தே அமையும், சேரநாடு நீர் வளத்திலும், நில வளத்திலும் சிறப்பு பெற்று விளங்கியது என்பதை,

**"தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்**

**ஏறுபொருந செறு உழாது வித்துநவும்**

**கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்" (பதிற்றுபத்து பா.13, வரி.1-7)**

இமயவரம்பன் ஆளுகின்ற நாட்டிலுள்ள வயல்களின் நீர் நிரம்பியமையால் ஆரல் மீன்கள் துள்ளத்திரியும் இடங்களாயின. ஏறுகள் தம்முன் போரிட்ட படியினால் வயல்கள் உழ வேண்டாதபடி விதை விதைப்பதற்கு உரியவாயின என்றதால் இமயவரம்பனின் நாடு நீர் வளத்தோடு இயற்கை வளமும் பெற்றிருந்தது என்பதை அறியலாம்.

**மன்னனின் வீரம்**

சங்க கால மக்களும் மன்னர்களும் வீரத்தை கண்ணாக கருதினார். வீரமில்லாதவர்களை மதிப்பவரும் இல்லை. போரில் மார்பில் புண்பட்டு இருந்ததையே வீர மரணமாக கருதினர்.

**"எழுமுடி கெழீஇய திரு ஞெமர் அகலத்து**

**நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை" (பதிற்றுபத்து பா.14, வரி.11-12)**

ஏழு அரசர்களை வென்று அவர்கள் தரித்திருந்த மணிமுடிகள் ஏழினையும் கவர்ந்து அவர்களின் மார்பினை வாளினால் கீறி பகைவரை வென்றவன் இமயவரம்பன் என்பதால் வீரத்தில் சிறந்தவன் என்பதை உணரலாம். சங்க கால மக்கள் வீரத்தை பெரிதும் போற்றி வாழ்ந்து வந்துள்ளனர் என்று வீரமில்லாதவனை மக்கள் மதிப்பதில்லை என்றும் மக்களையும் நாட்டையும் பகைவரிடமிருந்து காப்பாற்ற வேண்டிய கடமையை அரசன் பெற்றிருந்தான். அப்படி மக்களையும் நாட்டையும் காப்பாற்ற வேண்டுமென்றால் அதற்கு வீரம் இன்றியமையாத ஒன்றாகும். வீரமில்லாத அரசனின் நாட்டையும் நாட்டின் வளத்தையும் பகைவர்கள் அழித்து விடுவர். பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட பத்து அரசர்களும் ஒருவருக்கொருவர் வீரத்தில் சிறந்தவராக விளங்கினர் என்பது பதிற்றுபத்தில் அமைந்துள்ள பாடல்கள் மூலம் அறியலாம். பகைமன்னனின் காவல் மரமான கடம்பை மரத்தைப் பகைநாட்டில் சென்று வெட்டி வந்து அதைக் கொண்டு முரசு செய்தான் இமயவரம்பன் என்பதை,

**"பலர் மொசிந்தோம்பிய திரள் பூங்கடம்பின்**

**கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்**

**...சேரலாத" (பதிற்றுபத்து பா.11, வரி. 12-14)**

என்ற வரிகளால் அறியலாம். சங்க கால மன்னர்கள் பகைநாட்டை வென்று அந்த நாட்டின் செல்வத்தை கவர்ந்து நாட்டை தீயிட்டு அழிப்பது என்பதை வீரமாக கருதினர் என்பது அறியலாம்.

**முடிவுரை**

சங்க கால மன்னர்கள் அறநெறி பிறழாது ஆட்சியையும் வாழ்க்கையையும் மேற் கொண்டிருந்தனர் என்பது மேற்கூறிய செய்திகளால் அறியலாம். பதிற்றுபத்து உலகிற்கு வேண்டிய நல்ல நெறிகளைத் தந்து சென்றது என்பதில் எந்த ஒரு ஐயமும் இல்லை எனலாம். இமயவரம்பனின் நாடு வளம் பொருந்திய நாடாக திகழ்ந்தது என்பதை விட பண்பாடு மிக்க நாடாக திகழ்ந்தது எனலாம். ஒரு அரசன் மற்றும் மக்கள் எவ்வாறு வாழவேண்ம் என்பதை பதிற்றுபத்து நமக்கு எடுத்துக் கூறுகிறது.

**துணை நூற்பட்டியல்**

[1] *தமிழ் இலக்கிய வரலாறு*, மு. வரதராசன், சாகித்திய அகாதெமி, புது தில்லி, முதற்பதிப்பு – 1972.
[2] *சங்க காலம் தமிழர்களின் கலை இலக்கிய சமூக பண்பாட்டு வரலாறு*, கிழக்கு பதிப்பகம், 2015.
[3] *பதிற்றுப்பத்து மூலமும் உரையும்*, ஆலீஸ், அ., நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 600 098

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.